ஓம்

ஜெய கௌரி

அராலியம்பதி

## ஆவரசம்பிட்டியம்பாள்

# திருவந்தாதி வெண்பா




அருளியவர்:

த. கந்தசாமி அவர்கள்

(இளைப்பாறிய தலைமையாசிரியர்)

கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை.


14-1-79

# நூன்முகம்

அராலியம்பதி அம்பாள் என்ருல் பயபக்தி இல்லாதார் எவருமிலர். அம்பாளை நினைவூட்டியதும் தம் ஐம்புலன்களையுமொடுக்கிச் சிந்தித்த பின்பே மறுகதை மேற்கொள்வர் அம்பாளடியார்கள். அம்பாள் ஆலயப் பக்க வீதியாற் செல்பவர்கள் யாவரும் வாகனங்களிற் செல்பவர்தானும் வாகனங்களை நிறுத்தி இறங்கி நாவற்றருவை வலம்வந்தும் கற்பூரதீபமேற்றியும் வணங்கி அத்தருவின் ஒரு இலையாயினுந் தேடியெடுத்து அணிந்து கொண்டே செல்வர். எனவே அத்தரு எல்லாராலும் கற்பகவிருட்சம் போற் போற்றப்படுகிறது; பலன் தருகிறது. மனங் கசிந்து, கண்ணீர் வார்த்துத் தம் துயரைக் கூறின் உடன் நிவாரணம் அளிப்பவள் அராலியம்பாள்.

யான் எனது பாலிய காலந்தொட்டே அம்பாளிடம் ஈடுபாடு கொண்டவன். அம்பாள் நான் நொந்த நேரமெல்லாங் கைகொடுத்துதவுவாள். தாயைப் பாடிப் போற்ற வேண்டுமென்ற எண்ணம் இருவருடங்கட்குமுன் உதயமாகியும் முயற்சிக்கவில்லை. கடந்த ஆவணி கடைசி வெள்ளியன்று இரா கனவில் தன்னைப் பாடும்படி, இறந்த எனது சின்னமாமி வந்து கேட்டபின்பே அம்பாளின் கட்டளையென உணர்ந்து இப்பாக்களைப் பாடினேன். இவை தானுக வந்த பாக்களன்றி வலிந்து பாடப்பட்டவையன்று. எனவே இவற்றில் அருட்பொலிவுண்டு. வேண்டிய சித்திகளுண்டு. வேண்டிய வேண்டியாங்கெய்திட ஈண்டிருந்தருள்புரிவாளம்பாள்.

எனவே அம்பாளடியார்கள் இந்நூலைத் தம் தினசரி பாராயண நூலாகக் கொண்டு தமக்குவேண்டிய பாக்களைத் தெரிந்தெடுத்துப் பாராயணஞ் செய்து இஷ்ட சித்திகளை எய்துவீர்களாக. அம்பாள் அருள் பல்குக.

**மேற்படி ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ செ. சாம்பசிவக் குருக்கள் அவர்களது அர்ச்சனை ஆசியும் பெற்றுள்ளது:**

ஓம் ஜெய கௌரி

# தலமகிமை

## கர்ணபரம்பரை வரலாறு

ஜீவாஜி மன்னன் இந்தியாவில் ஆட்சிசெய்த காலம் அது. அராலிக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் வலையில், ஒரு சிலம்பும் பிரம்பும் அகப்பட்டது. அம்மீனவற்குத் தன்னையறியாமலே ஒருவித பயந்தூண்ட அவற்றை அக் கடற்கரைப் பக்கத்துள்ள நொச்சிக்காடு என்னுங் குறிச்சியிலுள்ளவர்களிடம் கையளித்தார். அவர்கள் அவற்றை வெளியே வைத்துப் பூசித்து வந்தார்கள். கிராமம் முழுவதும் கொள்ளைநோய் பரவிப் பலியெடுக்கத் தொடங்கியது. இவர்கள் பயத்தினால் செய்வதறியாது அராலி கிழக்கில் பெரிய சோதிடராகவும், மாந்திரிகனாகவும், தெய்வபக்தி மேம்பாடான வராகவும் விளங்கிய பெரியசாமிச் சாஸ்திரியாரிடம் கொண்டுசென்று காட்டி செய்வகை வினவினர். அவர்கள் அதற்கு ''நீரில் வந்ததை நீரிலேயே இடவேண்டும்'' எனக்கூறி ஒரு சுபதினமமைத்து அன்று மன்னரவைக் கூட்டங்களுஞ் சூழ இந்நாவலடியில் நின்றே ஒரு எலுமிச்சம் பழத்தை உருட்டி விட்டார். அது தற்போது மூலப்பீடமமைந்துள்ள இடத்தில் போய் நின்றது. அந்த இடத்தில் மிக ஆழத்திற்குக் குழி தோண்டச் செய்து அக்குழியில் இச் சிலம்பு பிரம்புகளையிட்டு மூடி அதன்மேல் பீடமமைத்து அதற்குக் கோவிலுமமைக்கப்பட்டது. அந்தப் பீடமே இப்பொழுதும் நாம் சிலை வைக்காது அம்பாளை உருவேற்றி வணங்கும் பீடம் அந்த ஆலயமே இது.

பண்டைய தமிழ் மன்னர்கள் களவேள்வி செய்து துர்க்கா வணக்கம் புரிந்த தலம் இதுவே. ஈழத்தமிழ் மன்னரன்றித் தென்னக வேந்தரும் வழிபட்டு அருள் மிகப்பெற்ற தலமும் இதுவேயாகும். ஈழத்துச் சிங்கள மன்னரின்மேல் சோழபாண்டிய மன்னர் அடிக்கடி படையெடுத்து வந்து வெற்றிவாகை சூடி ஈழ்த்தை ஆட்சி புரிந்தமையை நாம் சரித்திர வாயிலாக அறிகின்றோம். அங்ஙனம் படையெடுத்துவந்த தமிழக மன்னர்கள் திருவடி

நிலைத்துறையில் இறங்கிச் சோழிய புரத்தில் (சுழிபுரம்) தங்கி, அராலி அம்பாள் சந்நிதியில் துர்க்கா வேள்வி நடாத்தி வணங்கிச் சுபநேரத்திற் போருக்குச் செல்வார்கள் என்று கதை.

அதே விழாமுறைதான் பல்லாண்டு காலமாக இத்தலத்தில் நடைபெற்று வருகின்றது. மடைபரப்புத் தளத்துக்கு முன்னால் தம்பத்தில் சிங்கக்கொடியேற்றி விழா வருடந்தோறும் வைகாசி விசாகமுதல் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து 8 நாட்களுக்குச் சிறப்பான முறையில் விழா நடைபெறும். 8 ஆம் நாள் அம்பாள் ஊர்சுற்றி வரும் காட்சி அற்புதமானது. அன்று இக் கிராமவாசிகள் தத்தம் இல்ல வாசலில் மடைபரப்பி அம்பாள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். 9 ஆம் நாள் சனிவாரங் காலை வேள்வி விழா நடைபெறும். முன்பு உயிர்ப்பலியும் இவ் வேள்வி விழாவிற் கொடுக்கப்பட்டது. சிறிது காலமாக அது நிறுத்தப்பட்டபோதும் மற்றைய வேள்வி முறைகள் நடைபெற்றே வரப்படுகிறது.

ஆதிபராசக்தி, கொற்றவைத் தெய்வம், துர்க்கா தேவி வீற்றிருந்து அருள்பரிபாலிக்கின்றுள் இத் தலத்தில் அம்பாள் அருட்சத்தி அற்புதமானது; அருள்மயமானது; வேண்டுவார் வேண்டுவன ஈய்ந்து மகிழ்விப்பது.

அத்தகைய அம்பாள் பாதார விந்தங்கட்கு என் இதயமலரை அற்பணிப்பதோடு அடியார்களும் போற்றித் துதித்துப் பயன்பெறுவார்களாக.

ஓம் ஜெயகௌரி

உ

ஓம்

ஜெய கௌரி

அராலியம்பதி

# ஆவரம்பிட்டியம்பாள்

## திருவந்தாதி

வெண்பா

விநாயகர்துதி

அருளே ஒளியே அருவுருவே ஐம்முகனே
கருவம்பிட்டியமர் கற்பகமே — திருவே
ஆவரசம் பிட்டி அம்பாளி னந்தாதி
நாவரசாய் நின்று நவில்

அம்பாளந்தாதி வெண்பா

1. ஓங்கார நாயகியே ஒய்யார ரூபியரே
ஆங்கார தேவியே ஆதிசத்தி — ரீங்காரி
ஆதி பர மேஸ்வரியே அம்பிகையே ஆனந்தி
சோதி சொ ரூபியரே வா.

2. வாராய் வரமருள்வாய் வந்துவகை தந்திடுவாய்.
ஆராயென் னுள்ளம் ஆச்சியரே — தீராய்
கன்ம வினைகள் கருவுதித்த பாவங்கள்
ஜென்ம வினையே யற.

3. அறவேண்டுஞ் ஜென்மவினை அருள் வேண்டும் நின்-
[கருணை
பெறவேண்டும் பேரான பெரும்பேறு உறவேண்டும்
உன்னுறவு முன்துணையு முன்ஞெளியு மென்றனுக்கே
வன்னவடி வழகித் தாயே.

4. தாயாகி நின்றே தமியேனை யேற்றருயே
சேயேனைக் காப்பதும் உன்கடனே — ஆயே
அரும்பொருளே கரும்புறுகை கன்னியே காமாட்சி
பெரும் பொருளே பேறே யருள்.

5. அருள்வா யணைவா யருந்துயரே போக்கித்
தருவாய் தனங்கல்வி தானிறைய — வருவாய்
சூலந்தனை ஏந்திச் சிங்கந்தனி லிவர்ந்து
வேலன்மடி யமரவே.

6. வேலன் மடியமர வேழமுகன் அருகாகச்
சூலங் கரமிலங்கச் சுந்தரியே — ஆலம்
அமுதாக்கி யரனுரைக் காத்த பகவதியே
குமுதமே கோமளமே வா.

7. வாலையே வாலிவதம் புரிந்தான் தங்கையே
ஞாலமே போற்றுஞ் ஞானவதி — வேலனுர்
தாயே தயையுடைய தண்ணளியே தத்துவமே
ஆயே நின் கருணை தா.

8. தாங்குந் தாயகமே ஏங்கித் தவிக்குமெனை
ஓங்கவே வைக்கும் ஒளிமணியே — பாங்குடையான்
கைநெகிழா துன்னைக் கட்டி யணைத்தானே
மைவிழியே ஏனிந்த வம்பு.

9. புவியெலாம் நீயே மறையோர் புரியாகத்
தவியெலாம் நீயே ஆரணியே — தவியா
தவிக்கிறேன் தவிர்ப்பாய் தங்கமே என்துயரைக்
கவிக்கரசி நீயே புகல்.

10. புகல்வதற் கொன்றில்லைப் புங்கவியே பொன்னவளே
அகல்வதற் கேதில்லை அம்பாளே — சகலகலை
சம்பத்துந் தந்து தனித்துவமாய் நீ யொளிர்வாய்
ஏங்கப்பன் தேவியே, நீ.

11. நீயோ கொடுநீவி கொண்டானே கூத்தாடி
மாயாவி யுன்னண்ணன் மாமாயன் — சேயான
கந்தன் வனவேடன் கணபதியோ தொந்தியனும்
எந்தன் குறைதீர்ப்பார் ஆர்.

12. ஆரா வமுதே அளவிலாப் பேரொளியே
வாரா வினையறுக்கும் வல்லபையே — தீராத
தீயவினை யகற்றித் தீயவரை நீயழித்துத்
தாயாகிக் காத்திடுவாய் தாய்.

13. தாயாகி நிற்பாய் தனித்தாடுங் கலைகொள்வாய்
தூயாய் துணிவுடையாய் துர்க்கையே — காயா
பூங்கமலப் பொற்பாதம் போற்றினேன் பூரணியே
ஆங் கவலை நீக்கி யருள்.

14. அருள்வா யிருள்போக்கி யானந்தமாய் மிளிரத்
திருவாக்குந் திருச்செல்வி திருமணியே — உருவாக்கும்
உத்தமியே உமையாளே உள்ளொளிரும் மனோரமையே
வித்தகியே சித்தமதே நில்.

15. நிற்க இடை, நொந்தால் நின்கொங்கைப் பாரத்தால்
பற்ற நானுண்டு பகவதியே — கற்பார்
எழுத்தாணி தன்னால் உருகவைத்த காந்தையே
மழுப்பாதே தாராய்நீ சாந்தி.

16. சாந்தி யருளுஞ் சாந்தாவும் நீயேதான்
ஏந்தி யருளும் என்தாய்நீ — காந்திமிகு
சாந்தாளே என்தேவி சௌந்தரியே சுகுமாரி
பாந்தமுடன் பராபரியே பார்.

17. பாரெல்லாம் நின்புகழைப் பாடிப் பரப்பிடவே
சேரம்மா எந்நாவிற் சீரணியே — பாரம்மா
கருணை வடிந்தொழுகு, கடைவிழியா லோர்நோக்கு
இருளகற்றும் பேரொளியாய் நீ

18. நீயேயென் தஞ்சம் நீயேயென் நெஞ்சம்
நீயேயென் செல்வம் நிறைவளமே — சேயேன்
பகையைக் கடிந்து பலநலமுந் தந்து
வகையாக நான்வாழ வை.

19. வைப்பாய்நின் பூவடியே வண்ணமுற என்சிரசே
கைப்பார் கனமழிக்குங் கண்ணகியே — இப்பாரில்
ஒப்பில்லா மாமணியே ஒளியுருவே அருளொளியே
தப்பாது வந்தாள்வாய் நயந்து.

20. நயந்து நயந்துனையே நான்நாளும் வேண்ட
அயர்ந்தனையோ அம்பிகையே ஆரவல்லி—பயந்தாயோ
கூத்தன் கொடுசூலன் கொண்டான் குறியகற்ற
ஆத்தாளே நீயன்றோ காண்.

21. காணவே கண்ணிரண்டு காணாது மூன்றுவிழி
வேணுமே யென்று விரும்பியே — வாணுதல்
கோலமுறக் கொண்டே கொடுவினைகள் போக்கடித்துக்
காலபயம் போக்குமென் தாய்.

22. தாயுந்நீ தந்தையுந்நீ தயவான, சுற்றந்நீ
சேயுந்நீ சேருஞ் செல்வந்நீ — காயுந்நீ
பழமுந்நீ பழத்தொழுகு பாகுரசந்நீயே
வளமுந்நீ வாழ்வுமே நீ.

23. நீலிஜெக சாலிநிர் மலியே நிர்க்குணியே
ஆலிலைமேற் கொண்டான் சோதரியே — பாலிலுறு
வெண்ணெய் போல்நின்று ஒளியூட்டும் மங்கலையே
அன்னையே யபிராமி யே.

24. அபிராமி நீயே அயராது வந்தருளும்
உயிரான உயிரேயென் அஞ்சுகமே — பயிராருஞ்
செந்நெற் பளனங்கள் சூழ்ந்திலங்க வீற்றிருக்குங்
கன்னல் கனிரசமே சத்தி.

25. சத்தியுமாய்ச் சத்தியமாய் நித்தியமாய் நீளொளியாய்
சித்தியுமாய்ச் சீருமாய்ச் சிறந்தொலிரும் — புத்தியுமாய்
பத்தினியாய்ப் பார்மகளாய் பூமகளாய் நின்றொளிரும்
சத்தினியே சித்தியருள் தா.

26. தாழ்வடத்தாய் தண்ணளியாய் தங்குமெழிற் புன்ன -
[கையாய்
ஏழ்மையுறும் மக்கள் எழிலுறவே — வாழ்வளிக்கும்
அம்பிகையே நம்பினரைக் காக்குங் கருணையளே
தும்பிமுகன் தாயே பதி.

27. திரிசூலங் கையேந்தி அரியேறும் ஆச்சியரே
பரியேறும் பார்த்திபரும் வந்தணைந்தே — சரியான
உற்றஇடந் தேடியுறு பீடந்தா னமைத்தே
பெற்றனரே வைத்தனரே பேறு.

28. பேரும், புகழும் பேராருந் நல்வாழ்வுஞ்
சீருஞ் சிறப்பு மளிக்கவே — ஆறுமிடம்
நாவலடி யென்றே நனிவிரும்பி வந்தாயே
சிலம்பு பிரம்புடனே தான்.

29. தானே தனித்துவமாய்த் தனிப்பிரம்பு கொண்டாய்
தீனேறித் திமிர்படைத்த தீனரால் — தானேறும்
நல்வாழ்வு சீர்குலைக்கும் அவலநிலை போக்கி
நல்வாழ்வு நல்கிடவே நீ.

30. நீயே கதியென்று நின்னைச் சரணடைந்தார்
பேயோட்டு மன்றோபெரும் பிரம்பு — வாயாட்டி
மாந்தர்தமை வதைக்கும் வன்றொழிலை மாய்த்திடு -
[மென்
ஏந்தொழிலே நின்றருள் சரண்.

31, சரணென்று நின்னடியைச் சேர்ந்தார்க்கு நின்சிலம்பின்
பரல்நின் றொலிக்கு மொலியதுவே — அரணாகி
வல்வினைகள் வாராது செய்தொழில்கள் சீராகி
நல்மனையா யாக்கி விடும்.

32. விடுமெசெய் தீவினைகள் விட்டொழியும் பாவங்கள்
சுடுமேகொடும் பகையைத் தீயாகி — அடுமே
ஆழ்ந்த அறவில்லா அந்தகர்கள் செய்கொடுமை
தாழ்ந்தசையுஞ் சிலம் போசை தான்

33. ஓசை யொலி கேட்டே உன்சிலம்பு தானொலிக்கும்
நீசரா யுள்ளோரும் தாசராம் — தேசொளிர்
சிலம்பின் வலியறியார் பிரம்பின் வகைதெரியார்
புலம்பிப் புலம்பியலை வார்.

34. வாரேறு கொங்கை வடந்தாழ் வனப்புமலி
சீரேறு மங்கை செழிப்புடனே — ஏரேறும்
அராலி யெனும்பதியில் ஆவரசம் பிட்டியிலே
பராவவந் தமர்ந்தாள் பார்.

35. பாராயோ வென்னைப் பார்த்துமே என்கவலை
தீராயோ என்று துதித்தாலே — தீராத
தீவினையே விட்டகலும் சேர்செல்வந் தானுமுறும்
ஏர்வினையும் ஏற்றந் தரும்.

36. தருமே தனங்கல்வி தான்வேண்டும் நல்வரங்கள்
வருமே வாராத வளம்வாழ்வு — திருமேனி
காட்டாக் கவினுடனே கருவூலம் வீற்றிருந்தே
கேட்ட வரமளிக்குந் தேவி.

37. தேவியே தேவர்கள் போற்றிசெய் பூங்குழலி
பாவியார் பாவந் துடைத்திடுவாய் — காவியங்
கண்கள் திறப்பாய் கருணையருள் பொழிவாய்
வண்ண மகளேயென் மாரி.

38. மாரியே மகமாரி வாரியே சுகவாரி
தாரியே தனவாரி நாரியே — வீரியே
பாரியே பிறைதாரி வாரியே யணைத்தகௌ
மாரியே சூலி நீலி

39. நீலியே யானுய் என்வார்த்தை கேளாது
கூலியே யானுன் உன்பங்கன் — மாலியே
நெஞ்சத்து நீங்காத நிறைவளமே யுறையுருவே
அஞ்சற் கரந்தூக்கி யாள்.

40. ஆளுகின்ற தெய்வம் அருட்தெய்வந் திருத்தெய்வம்
சூளும்வினை போக்குஞ் சீர்த்தெய்வம் — நாளுமே
நாராயணி பாதம் நாடினுற் போதுமே
தீராப்பிணி யாவுந் தீரும்.

41. தீருமே என்வழக்கை ஊருலகந் தானறியச்
சேருமே என்னுடனே சிங்காரி — வாருமே
அன்ன நடைகொண்டு அணியாய்ப் பதம்வைத்தே
சொர்ண மகளே சுக வாரி.

42. வாரி யெறிந்தான் மகிஷனுந்தன் படையை
நாரி யென்றுன்னை நயவாதே — சூரியே
வதைத்தா யவன் சிரசை யுன்பாதந் தானேற்றே
விதைத்தாய் நல்லருளே யாம்.

43. ஆம்பொரு ளும் நீ அயராத தாயும் நீ
நாம்போற் றுந், தெய் வம்நீ சுமதையே — தோம்-
[பாரும்
மந்திரமுந் தந்திரமும் மருந்தும் மறையும்நீ
அந்தமிலா ஆனந்தம் நீ.

44. ஆனந்தம் பொங்க அருளமுதம் பொங்கிடுமென்
தானந்த மில்லாத் தனியரசி — ஏனந்தன்
உற்றவடி வெடுத்தா னண்ணனுன் னடிகாணப்
பற்றினே னின்னடியே யான்.

45. யானே யுனதடிமை யானே யுனதுறவு
யானே யுனதுறுநற் பாலனும் — யானே
உன்புக ழைப்பாடும் உன்னரிய தாசனும்
அன்னையே அம்பாளே வாணி.

46. வாணிவர மருள்வாய் வகையாக யான்பாட
நாணியே நில்லாதே நாவரசி — வேணியே
உன்நாமம் உன்னுருவம் உன்னருளே எந்நாளும்
என் நாவில் நிற்கவரு ளாய்.

47. ஆயிரங் கண்ணுடைய ஆச்சியே நாச்சியரே
தாயிரங் காதென்னில் யாரிரங்கும் — சேய்துயர்
தாய்க்கன்றோ தான்தெரியும் மாற்றுருக்கென் தெரியும்
சேய்க்குன் மகிமைதனைக் காட்டு.

48. காட்டுங் கருணையினுற் கன்னியே என்மனதை
வாட்டுங் கவலையெலாம் மாறுமே — கூட்டும்
விழியாரருள் நோக்கால் அணைந்திடுவா யாருவிரே
பழியொன்றும் வாராது காண்.

49. காணவே கண்ணுண்டு பூணவே யருளுண்டு
நாணமே வேண்டாம் நாயகியே — பேணவே
பெற்றேன் பெரும்பேறு பேரழகி நீவந்தே
பற்றுவா யென்னைப் ப்டர்ந்து.

50. படர்ந்து அருள்பரப்பி மங்கா ஒளிபரப்பித்
தொடர்ந்து நின்றென்னைக் காத்திடுவாய் — அடங்-
[காத
பேய் பில்லி சூனியம் மாய்ந்தே யழிந்தோட
ஆயே யருள் வாய்நல் வாக்கு.

51. வாக்கில் ஒளிமிளிர மனதில் இனிமையுற
தேக்குந் தீந்தமிழின் சுவையமுதே — காக்குங்
கருணைமிகு சங்கரியே சாம்பவியே சடாட்சரியே
அருணமொளி நிற்பவளே வா.

52. வாவாவென் றுன்னை வாரியணைத் தாரோ
பூவார்மலர்க் கொன்றைப் புண்ணியனுர் — நாவாரும்
நல்லரசி நீயே யான்புனையும் பாவிலுறு
சொல்லரசி நீயே துணை.

53. துணையேநீ சங்கரர்க்குச் சங்கரனுர் நின்துணையே
பிணையே மடப்பிடியே காமாட்சி — இணையேயில்
கனக தனக்குன்றே கற்பகமே கண்மணியே
எனது அகத்துறைசெஞ் சோதி.

54. சோதி வடிவுடனே சொகுசான பட்டுடுத்தி
ஆதி வடிவுடனே அமருவாய் — நாதியிலேன்
நாயகியே நாரணியே நாதாந்த வித்தகியே
சாயகியே சாந்தாளே நீ

55. நீயென் மொழிகேட்பாய் நீங்காது நின்றுறைவாய்
ஈயும் அலங்கார மாலையிதே — தூயாய்
சூட்டினே னுன்மார்பிற் சுந்தரியே ஏற்றருள்வாய்
பாட்டியே பரிமளேகௌ மாரி.

56. கௌமாரி வீரியே கருமாரி சீரியே
வௌகாது நின்றே நடம்புரிவாய் — அஃகாத
அங்க மசைய அரனுருஞ் சேர்ந்தாடக்
கொங்கை குலுங்கிடவே ஆடு.

57. ஆடியே யகிலமெலாம் ஆட்டிவைக்குந் நாட்டியமே
தேடியே வந்தேன் திருத்தாளே — பாடியே
பணிந்தேன் சொரிந்தேன் பரவசமே மேலுற்று
அணிந்தே னுன்பாத மலர்.

58. பாதமலர் சூடிப் பாடினே னின்புகழை
ஏதமொன் றின்றியேற் றருள்வாய் — சீதமொளிர்
குங்குமத் தாயே குமரியே கிழவியே
பங்கயத் தாயே பரி.

59. பரிமளமே சொரியருளே வரிவேங்கை வீரியரே
திரிவிழியே யரியேறுந் நந்தினியே — திரிசூலி
நீலியே சீலியே பாலியே சம்பந்தன்
பாலிலுற ஞானமளித் தாய்

60. அளித்தாயே ஞானமதைப் பாங்குடனே பண்ணிசை [யிற்
களித்தாயே உன்றன் மனமார — அழித்தாயே
துர்ச்சமணர் துர்ச்செயலே நற்றமிழின் நல்வலியால்
கர்ப்பவினை போக்குமென் தாய்.

61. தாயாகி ஏனத்தின் குட்டிகளைக் காத்தவனின்
வீயாநல் லன்புப் பெருந்தேவி — நாயேன்
நாடினேன் நாடி நயந்துமே வேண்டினேன்.
வாடிநீ யாடியொய் யாரி.

62. ஒய்யாரி ஓங்காரி ஆங்காரி ரீங்காரி
பையார் மணியாரப் பைங்கிளியே — நையாதே
நானிருக்க நாடினேன் தேடினேன் பாடினேன்
தேனினிக்குஞ் செம்பவள வாய்.

63. தேனினிக்குஞ் செம்பவள வாயாலே யோர்வார்த்தை
நானினிக்கச் சொன்னு லாகாதோ — மேனியொளி
பார்த்தால் மனங்குளிரும் பட்டுடையின் சித்திரமே
ஆத்தா ளலங்கார மே.

64. அலங்காரத் திலகமொளிர் அழகொழுகு மதிவதனம்
நலங்காத பட்டொளிரும் முத்துவடம் — இலங்கிடு
[மென்
பூங்கொடியே புங்கவியே புனிதவதித் தாயாரே
ஈங்கிடுவாய் நின்னுர் அருள்.

65. அருளுண்ட விழியாளே அழகுண்ட முகத்தாளே
இருளுண்ட கூந்தல் அழகியரே — மருளுண்டு
மயங்கிக் கிடப்பேனை மயக்கந் தெளிவாக்கத்
தயங்கிக் கிடப்பதென் நீ.

66. நீயே நிறைந், திலங்குந் நீர் சுற்றும் பூமியிலே
தாயாய்த் தனித்திலங்குந் தயாபரியே — சேயேன்
மாரியென்றேன் மற்றவரே மேரியென்முர் விந்தை
பாரியக்கும் பராபரியே பார். [தனை

67. பாறை தனிலே பகட்டாக வீற்றிருந்து
நாறும் மலர்சூடும் நாயகியே — தேறும்
பெரும் பொருளே என்றன் புவனேஸ் வரியம்மா
அரும் பொருளே அருமறையார் செல்வி

68. செல்வியே செல்வச் செருக்கே யென்சீமாட்டி
கல்வியே கூட்டும் கவிவளமே — வல்லியே
கண்டேனே யுன்றன் கண்ணூர்ந்த கருணையொளி
உண்டேனே யுன்பா ரசம்.

69. சம்பந்தர் கொண்டார் ஞானமுன் பாலருந்தி
என்பந்தங் கொண்டா யெனக்கென்ன — நின்பந்தம்
பெற்றேனே யென்றுலகம் பொய்பேச வையாது
நற்றுயே நயந்துதவு வாய்.

70. உதவுவா யுன்றன் ஓங்காரத் துள்ளொளியை
சதமுமே நின்பாதம் பணிந்திடவே — பதமுடனே
பண்ணுங் கலந்தொலித்தாற் கேளாதார் யாருண்டு
எண்ணுங் கருத்தை யளி.

71. அளிக்கும் அருளமுதை ஆயிரம் நாவாலே
களிக்கும் பாடியருள்வாய் காமாட்சி — விழிக்கும்
அருளுண்டு அமுதுண்டு பொருளுண்டு மகிழ்வுண்டு
கருவுண்டு கண்காட்சி தா.

72. தாயகி நீ நாயகி நீ தூயகி நீ சாயகி நீ
சேயகத்திற் கொண்ட செல்வம் நீ — ஆயகத்தில்
கருணை யெழுந்திடுமேற் காலனும் நாடானே
வருமிடர் வாராது போம்.

73. போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியளே
ஆக்கும் அருங்காதற் தெய்வமே — காக்குந்
தன்கைப் பிரம்புந் தனிச்சிலம்பும் நின்றுடும்
என்கைப் பொருஞ்பரந் தாமி.

74. தாளிருக்கும் பீடமதில் விழியிருக்குங் ககனமதில்
தோளிருக்குஞ் சிவனாரின் பக்கலியே — வாளிருக்குங்
கையாள் வளமுடையாள் முத்தாரமொளிர் மெய்யாள்
செய்யாள் சிவகாமியென் நெஞ்சே.

75. நெஞ்சத் தமர்ந்து நீங்கா வருள்சுரந்து
வஞ்சப் பிணிதீர்ப்பாய் மாமருந்தே — தஞ்சியே
என்னுகங் கொண்ட கல்யாணி சுந்தரியே
நன்னுகங் கொண்டவென் தாய்.

76. தாயற்ற சேயெனத் தரணியோ தேசாதே
நீயுற்றே யென்னை ஆதரி — வாய்விற்கும்
மாந்தர் தம்மை மனமகிழ வையாதே
சாந்தாளே சாமளையே சார்.

77. சார்ந்திடுவார் தம்மின் சார்ந்த துயரமெலாம்
சாந்தாளே நீயே சரித்திடுவாய் — வார்ந்தோடும்
ஆற்றுப் படுக்கையிலே யமர்ந்த விசாலாட்சி
போற்றினேன் பொற்பாத மே.

78. பொற்பதத்தாய் பொன்னொளியாய் பொற்பதங்கள்-[தந்த
அற்புதத்தாய் ஆரணியே அருளணங்கே — நற்பதத்-[தால்
நாடினேன் நாடிநலி தீர்க்கும் வகைகாணத்
தேடினேன் தேவி நீ வா.

79. வாருங் கடலலைகள் வளமாருங் கரைதனிலே
சேருஞ் சிலம்பு பிரம்பினிலே — ஆரும்
அம்பலவன் தேவியே ஆரணியே நாரணியே
செம்பவள மேனியவள் தன்.

80. தந்தையைத் தானழிக்கத் தன்மகனையே விட்ட
விந்தை மகளே வீராயி — அந்தகன்
வந்துற்ற போதவன் பாசஞ் சூலமெலாஞ்
சிந்தி விழச்செய் விரைந்து.

81. துள்ளிக் குதித்துத் தூமணிசேர் பட்டுடுத்தி
அள்ளிச் சொரிவா யருளொளியை — கள்ளியை
வெள்ளி மலையாளை விடையேறு முத்தமியை
வள்ளியின் மாமியை யுன்.

82. உன்பெருமை யறியாத உன்மகனர் வேலவனும்
தன்பெருமை கொண்டே உலகலேந்தான் — நின்
[பெருமை
கண்டான் கணபதியே கடுகியுனே வலம்வந்தே
கொண்டானே நின்கைக் கனி.

83. கனியே கனிரசமே கவிஞெழுகும் பொன்னுருவே
பனியேறு மிமையத் தரசியே — இனியே
தாமத மேனம்மா தனித்துவரத் தயக்கமோ
வாமனவ னுண்டே துணே.

84. உண்டுதுணே யிங்கே உன்னெளியைக் காண்பதற்கே
மண்டி வருவார் பலருண்டே — தெண்டனிட்டே
உன்கருணே வேண்டி யுகுக்கின்ருர் கண்ணீரே
என்னருமைத் தாயே யருள்.

85. அருளொளி நீயென்ருே அகிலமெலாம் போற்றும்
பொருளொளி நீயன்ருே பொன்மகளே — இருள்சூழ்
வல்வினேயைப் போக்கும் வல்லவியே தொல்கிழவி
தொல்வினேயைப் போக்கியே நில்.

86. நின்று மிருந்துங் கிடந்தும் நினேப்பதுனே
என்று மென்னுள்ளத் தரசிநீ — நன்றே
கன்று கதற இரங்காப் பசுவுண்டோ
என்றனு யிரேயென்சுந் தரி.

87. சுந்தரியும் நீயே புரந்தரியும் நீயே
சௌந்தரியும் நீயே சுதந்தரியே — வந்தரியே
கோலமது காட்டிக் குணமாயெனே யணேவாய்
ஞாலமொளி ரபிராமி யே.

88. ராமியே வாமியே காமியே பூமியே
சோமியே தாமியே பாமியே — நாமியே
பட்டர் பரவப் பரவினுய் முழுமதியாய்த்
தட்டா தமாவாசி நாள்.

89. நாளின் கொடுமையுரு கோளின் கொடுமையுரு
வாளின் கொடுமையுரு நானிலத்தீர் — நாளுமே
ஆத்தா, ளடியை அருகணைந்து பணிமின்கள்
தீர்த்தாளே உங்கள் இடர்.

90. இடரறுக்கு மில்லத் திருளறுக்கும் பொல்லா
விடமறுக்கும் பாவம் அறுக்குமே — சுடரொளிரும்
அங்கை திரிசூலி யம்பாளமர்ந் துறையும்
செம்பொற் சிலம்பா மணி.

91. அணிந்தே னுனையே அணியாக வென்னுள்ளம்
துணிந்தே னுனையே களவாட — பணிந்தேன்
பாவாலும் பூவாலும் பாங்காக நின்றுளே
கோமாதே உள்ளத் துவந்து.

92. உவப்பா யுறுவா யுல்லாச மலரணையில்
தவத்தாய் தனித்தாய் தண்ணளியே — தனத்தாய்
தித்திக்குந் தீம்பாலே தெள்ளமுதின் சுவைரசமே
சித்திச் சிவமலரே தேவி.

93. தேவியே யென்று தேடிச் சரணடைந்தார்.
ஆவியே கவரவரு மருங்காலன் — தாவியே
ஓடி யொழிய உமையாள் திரி சூலந்
தேடித் துரத்திடுமே தேர்.

94. தேர்வதற் கொன்றில்லைத் தென்னவளே என்னவளே
ஆர்வதற் குன்னருளே தானுண்டு — சேர்வதற்கு
உன்னுருவ முன்வதன முன்விழிக ளுன்னருளே
மன்னுமுன் னெல்லாமே தான்.

95. தானே தன்தாதை தேரச்சுப் பொடிசெய்து
மானே யுனையணைந்த ஐங்கரனை — தேனே
தெள்ளமுதே யென்று பாராட்டுந் தாயே யுன்
உள்ளமுதோ கள்ளியரே சொல்.

96. சொல்லும் பொருளும் நல்லணியா நயமமைய
வெல்லச் சுவைக்குமிகு சுவைசேர — கல்லுந்
கசியுங் கவிதந்தார் குமரகுரு என்கவியும்
ருசியாக ஆகுமோ உனக்கு.

97. உனக்கே விழியுண்டு அருளுண்டு பொருளுண்டு
எனக்கே தரவுண்டு தாயாரே — தனந்தே
தரளவடஞ் சுமக்குந் தங்கமே பொன்மயிலே
கரகமே கையேந்தி யே.

98. கையேந்தி நின்று கண்ணுலே நீர்மல்க
மெய்யாளே செய்யாளே ஐயாளே — துய்யாளே
என்றென்றே மெய்யுருகி நானழைக்க வாராயேல்
நன்றன்றோ நற்ரு யுளம்.

99. உளத்தே புகுந்து ஒளியூட்டு முள்ளொளியே
வளத்தாய் வரத்தாய் வனப்பாய் — களத்தே
அவியுண்டு மண்டிக் களியாடுந் தேவரெலாம்
புலிமண்டிப் போற்றிசெய் வார்.

100. போற்றியுன் மலர்ப்பாதம் போற்றியுன் இன்னருளே
போற்றியுன் மதிவதனம் போற்றி — நீற்றிலொளிர்
குங்குமப் பூந்திலகம் குளிர்விழிகள் அருளொளியே
செங்கையிற் கரும்பு சூலம்.

101. சூலம்பிடித்தா யெமபாசந் தானறுக்க
வேலனைத் தந்தாய் வெற்றியுற — ஞாலமிதில்
உன்தா யுள்ளம் அறியாத பேதையர்கள்
என்தான் செய்வாரோ இனி.

102. இனிக்குங் கரும்பே இனிமைதரு மழகொளியே
கனிக்குங் கனியே கனியமுதே — பனிக்குந்
தேனூர்ந்த பூங்கோதாய் பூம்பட்டுடை யழகி
நானூர்ந்த செல்வி சரண்.

103. சரணஞ் சரணஞ் சங்கரியே ஜெயகௌரி
சரணஞ் சரணஞ் சாந்தாளே — சரணம்
சாம்பவியே சாமுண்டி சாமளையே வயிணவியே
ஆம்புவியில் நீயே அரண்.

104. அரனும் நீ அயனும் நீ அருளாரும் மயனும் நீ
சிரமும் நீ செவியும் நீ விழியும் நீ — கரமும் நீ
வேப்பிலைக் காரிவிறல் வீரிவேங் கையிலர்
காப்புடைத் திரிசூலி யே.

105. திரிகோணத் தேயமர்ந்து ஒருகோண மாளுகின்ற
அரிதங்கை பூரத்தாய் மங்கலையே — அரியேறி
மாயாநற் குண்டலியே காயாம்பூ மேனியளே
வீயாநற் குங்குமத்தாய் வா.

106. குங்குமம் மின்னப் பொன்மகுடந் தான்மின்ன
மங்கலஞ் சூழும்முகம் மின்ன — அங்கை
கரகங் கரும்பு கமலந் திகிரியுடன்
பரவும் பணியே பரி.

107. பரிந்த பரிவாலே அம்மையே உன்னழகு
விரிந்த தவிழ்ப்பாவாற் பரவவே — சொரிந்த
கருணை மிகொட்சி காருண்யப் பொலிவுடனே
அருளிணு யந்தாதி யே.

108. அந்தாதி கண்டேன் ஆவரசம் பிட்டியொளிர்
நந்தா அருளொளியை நான்கண்டேன் — சிந்தாத
முத்துச் சிரிப்பிலங்கும் கௌமாரி தண்ணருளை
சித்தந் நிறையக் கண்டேன்.

### போற்றிவிருத்தம்

எண்ணுதற் கினியாய் போற்றி எழிலொளிர்தாயே போற்றி
நண்ணினர்க் கெளியாய் போற்றி நாடினர் திருவே போற்றி
பண்ணினி மொழியாய் போற்றி பகையழி துர்க்கா போற்றி
கண்ணுதற் பெருமான் பங்கே கமலைகௌ மாரி போற்றி.

### நூற்பயன்

### வெண்பா

சிந்தித்துப் பாடுங்கள் தேவிமலர்த் தாளை
வந்தித்து வாழ்த்துங்கள் வாய் மலர — பந்தித்த
தீயவினை நீயும் தீப்பகையுந் தானழியும்
ஆயதனங் கல்வியும் ஆம்.

சுபம்

ஓம் ஜெயகௌரி

நாமகள் அச்சகம், யாழ்ப்பாணம்.